# ஹாலிஎல பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரில் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 அக்டோபர் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹாலிஎல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த டபள் கப் வண்டியின் பெறுமதி ரூபா 6,390,000 தொகை எனினும், அதனை ரூபா 6,300,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 90,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அதே போல் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி ரூபா 90,000 மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 90,000 வீதம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொது மக்களின் பயன்பாட்டுக்காக சபைக்கு வழங்கியிருந்த 456 கல்வனயிஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதியாகிய ரூபா 450,765 தொகையினை மூலதனப்படுத்தாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 450,765 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு பெற்றுக் கொடுத்துள்ள 10 பல்கரும நடமாடும் கடைகளில் பெறுமதியாகிய ரூபா

265,000 இனை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,348,570 இற்கான காசேட்டின் மீதி ரூபா 11,505,196 தொகை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 8,156,626 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்புத் தொகையின் மீதி ரூபா 4,486,072 தொகை என கடன் கொடுத்தோர்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் பொறுப்புக்கள் அதே தொகையால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் பல்கருமக் கட்டடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யும் உப செயற்திட்டத்திற்கான உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகை தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய வட்டியினை செலுத்த வேண்டிய செலவு ஒன்றென பதிவு செய்யாமல் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தமையால், உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன் மீதி ரூபா 4,119,926 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 7,299,522 தொகை எனினும், அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,203,951 என காட்டப்பட்டுள்ளமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 1,095,571 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த தொகையை விட, மீளாய்வாண்டின் போது மிகையாகக் கிடைத்திருந்த ரூபா 917,596 இற்கான முத்திரைக் கட்டணத்தினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 2,269,346 தொகை எனினும், அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,088,333 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் ரூபா 181,016 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகையின் தவணைப்பணம் மற்றும் வட்டி செலுத்துதல் என்பவற்றை கடன் கொடுத்தோர் கொடுப்பனவு ஒன்றென குறிப்பிட்டிருந்ததை சரி செய்யும் போது கடன் கொடுத்தோருக்கான கணக்கு செலவு வைக்கப்பட்டு வட்டி செலவுக் கணக்கு மற்றும் கடன் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், கடன் கொடுத்தோர் செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதிய மீதி ரூபா 19,502 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்கான மிகையாகிய ரூபா 5,413,595 தொகையினை திரண்ட நிதியக் கணக்கிற்கு நாட்குறிப்பு ஒன்றின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2013 ஆண்டின் போது மீகையாக பதிவு செய்யப்பட்ட நிலுவை நீர்வரி, திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்படாமல் நீர்வரி கணக்கிற்கு வரவு

வைக்கப்பட்டிருந்த காரணத்தினதல் நடைமுறை ஆண்டிற்கான நீர்வரி வருமானம் ரூபா 12,053 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மூன்று கணக்கு விடயங்கள் தொடர்பான துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 5,175,458 ஆக காணப்பட்டதுடன், நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 8,066,732 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73,754,893 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,867,541 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

ரூபா 18,050,944 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள், தொடர்பாக பட்டோலைகள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமிண்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 371 | 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்களான ரூபா 603,605 இனை 2014 செப்டம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 31,318 பெறுமதியான 5 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவை<br>------------------------------------------------------------- | |
| | அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள, இறந்துள்ள 16 ஊழியர்கள் / அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 159,713 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,061,622 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,421,364 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,359,742 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 7,299,522 |
| முத்திரை கட்டணம் | 2,269,346 |

2.2.2 நீர்க் கட்டணம்

----------------------

(அ) ரூபா 200 இற்கான மாதாந்த நிலையான நீர்க் கட்டணமொன்று அறவீடு செய்யப்படும் போகஹமடித்த நீர் திட்டத்தைச் சேர்ந்த 72 நுகர்வோர்களிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்வாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 266,400 ஆக காணப்பட்டதுடன் அதில் அடங்கியுள்ள நுகர்வோர்களில் அனேகமானோர் நீண்ட காலமாக கட்டணம் செலுத்த தவறியுள்ளனர்.

(ஆ) சபைக்குச் சொந்தமான நில்போவில நீர்த்திட்டத்தின் கீழ் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளாவறு 76 நுகர்வோர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 171,440 ஆகும். அவற்றில் ரூபா 4,500 இனை மிகைத்துள்ள நிலுவை மீதிகளை கொண்ட நுகர்வோர்களின் எண்ணிக்கை 12 காணப்பட்டதுடன் அந் நிலுவை தொகைகளை அறவீடு செய்வதற்கான முறையான நடைமுறை ஒன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பண்ட கணிப்பீட்டின் போது சபையின் தலைமை அலுவலகத்தை சேர்ந்த ரூபா 206,090 தொகை பெறுமதியான 26 விடயங்களில் பற்றாக்குறை ஒன்றினை கணிப்பீட்டு சபை இனங் கண்டிருந்த போதிலும், அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்காக செயற்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்